# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 04, 2023

Weekly E-paper • Novemeber 04, 2023




## காட்சிகள் மாறும் நாடகம் போலே

சுப. வீரபாண்டியன்

## ஆளுநரின் சர்வாதிகாரம்!

பொள்ளாச்சி மா. உமாபதி

## நூறைத் தாண்டிய தியாகி

தலையங்கம்

## “ஒட்டுக் கேட்கும் ஒன்றிய அரசு” ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை!

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● நவம்பர் 04, 2023

Weekly E-paper ● Novemeber 04, 2023


# காட்சிகள் மாறும் நாடகம் போலே

சுப. வீரபாண்டியன்

தொடர்ந்து வருமான வரித்துறை, அமலாக்கத்துறை இரண்டையும் வைத்துக்கொண்டு தமிழ்நாடு அரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு அவப்பெயரை ஏற்படுத்திவிட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால்தான் செந்தில் பாலாஜி, பொன்முடி, ஜெகத்ரட்சகன் – இப்போது எ.வ.வேலு!,

வருமான வரித்துறை சோதனை நடந்த உடனேயே ஒருவர் குற்றவாளி ஆகி விடுவதில்லை. அதற்குப் பிறகு பல தொடர்




நடவடிக்கைகள் உள்ளன. இறுதித் தீர்ப்பை நீதிமன்றம் – அதாவது உச்சநீதிமன்றம், வழங்கும். ஆனால் இப்போதே எதிர்க்கட்சியினரும், சில ஊடகங்களும் மிகப் பெரிய ஊழல் நடந்து விட்டது என்பது போலப் பேசுகின்றனர்.

நேற்று இரவு நடைபெற்ற ஒரு தொலைக்காட்சி விவாதத்திலும் அப்படி ஒரு நிகழ்வைப் பார்க்க முடிந்தது. புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, 1250 கோடி ரூபாய் ஜெகத்ரட்சகன் வீட்டில் பிடிபட்டிருக்கிறது. இது ஊழல்தானே என்று கேட்டார். மிக நிதானமாக, அந்த விவாதத்தில் பங்கேற்ற கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஒரு வினாவை முன் வைத்தார். 1250 கோடி ரூபாய் பிடிபட்டிருப்பதாக டாக்டருக்கு யார் சொன்னார்கள் என்று கேட்டார்.

வருமானவரித்துறை தான் சொல்லி இருக்கிறது என்றார் கிருஷ்ணசாமி. அப்படியா வருமான வரித்துறை எந்த அறிக்கையில் அப்படிச் சொல்லி இருக்கிறது என்று ரவீந்திரன் திருப்பி கேட்க, கிருஷ்ணசாமி மேலும் கீழும் விழித்துப் பார்த்தார். பிறகு ஊடகங்களில் வந்திருக்கிறது என்றார்.

ரவீந்திரன் விடவில்லை. முதலில் வருமான வரித்துறை என்றீர்கள், இப்போது ஊடகங்கள் என்கிறீர்கள். இது முரண் இல்லையா என்று கேட்டதோடு, ஊடகங்களில் உங்களைப் பற்றி வந்திருக்கிற செய்திகளை எல்லாம் இங்கு நான் பேசலாமா என்றும் கேட்டார்.

டாக்டர் கிருஷ்ணசாமியிடம் பதில் இல்லை!

அடுத்து சில அருமையான வினாக்களை ரவீந்திரன் அந்த அரங்கில் தொடுத்தார்.

பிரதமர் மோடியால் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அஜீத் பவார் பாஜக கூட்டணிக்கு வந்தவுடனேயே புனிதராகி விட்டார். அவருக்கு நிதி அமைச்சர் பொறுப்பும் கொடுக்கப்பட்டன.

தற்போது அஸ்ஸாம் முதலமைச்சராக இருக்கும் ஹிமந்த பிஸ்வா காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். அப்போது சாரதா சிட் பண்டு ஊழல் வழக்கில் விசாரணைக்கு உள்டுத்தப்பட்டவர். தற்போது அவர் பாஜகவிற்கு வந்தவுடன் வழக்கு கண்டுகொள்ளப் படவில்லை.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்த சுவேந்து அதிகாரி, தெலுங்கு தேசம் கட்சியில் இருந்த ஒ.எஸ் சவுத்ரி என பாஜகவிற்கு வந்த பிறகு வழக்குகள் வேகம் எடுக்கவில்லை.

மகாராஷ்டிர எம்.எல்.ஏ ஹர்ஷ்வர்தன் பாட்டீல், “காங்கிரசிலிருந்து பாஜகவிற்கு வந்த பிறகு நிம்மதியாக உறங்குகிறேன்” என்று வெளிப்படையாகவே கூறினார்.

இதே மஹாராஷ்டிராவின் சாங்க்லி தொகுதி எம்.பி சஞ்சய் பாட்டீல், “பாஜகவில் சேர்ந்த பிறகு எனக்கு அமலாக்கத்துறை பற்றி பயம் இல்லை” என்று பொது மேடையில் பேசினார்.

முகுல் ராய் மீது சிபிஐ வழக்கு பதிவு செய்தது. பின், திரிணாமூல் காங்கிரசில் இருந்து விலகி பாஜகவிற்கு அவர் சென்றவுடன் அந்த வழக்கு என்ன ஆனது ?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் கிருஷ்ணசாமி மட்டுமில்லை, எவராலும் விடை சொல்ல முடியாத என்பதை நாம் அறிவோம். இப்படித்தான் இன்றைக்கு இந்த வருமான வரிச் சோதனை, அமலாக்கத்துறை சோதனை நாடகங்களில் காட்சிகள் அரங்கேறிக் கொண்டுள்ளன.

●

# ‘As soon as possible’ஐ ‘As late as possible’ ஆக்கும்

# ஆளுநரின் சர்வாதிகாரம்!

● பொள்ளாச்சி மா. உமாபதி

ஆளுநர் பதவி என்பது , “ஆட்டுக்குத் தாடி போன்று தேவையற்றது, பயனற்றது.” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்புகின்ற தீர்மானங்களுக்கு எல்லாம் ஒப்புதல் தராமல், அவற்றுக்கு விளக்கமும் கேட்காமல் காலம் கடத்திக் கொண்டிருப்பது என்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு வேலையில்லாமல் காத்திருக்கின்றனர். அவர்கள் அரசுப் போட்டித் தேர்வுகளை எழுதி அதன் வாயிலாக அரசுப் பணியாளர்களாகக் காத்திருப்பவர்கள். அவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற அமைப்பு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம். அதற்கான தலைவரையும், உறுப்பினர்களையும் பரிந்துரைத்து ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தால் அதைக் கிடப்பில் போட்டு வைத்திருக்கின்றார் ஆளுநர் ரவி.

இவர் தமிழக அரசின் கொள்கைக் கோட்பாடு, சித்தாந்தங்கள் ஒவ்வொன்றிலும் முரண்பட்டுப் பொதுவெளியில் ஓர் அரசியல்வாதியைப் போன்று கருத்து தெரிவித்து வருகிறார். அரசியல் கட்சிகள் செய்ய வேண்டிய வேலையை ஆளுநர் ரவி தன்தலைமேல் போட்டுக்கொண்டு செயல்படுகிறார். தி.மு.கழகத்தின் கிளைக் கழகச் செயலாளர் ஆகின்ற தகுதி கூட இல்லாத இவர், ஒன்றிய ஆட்சியாளர்களின் ஊதுகுழலாகவே செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்.

அ.தி.மு.க வின் முன்னாள் அமைச்சர்கள் செய்த ஊழல்களுக்கு எதிராக வழக்குகளை, அடுத்த கட்ட விசாரணைக்கு எடுத்துச் செல்வதற்குத் தடையாக ஆளுநர் இடைமறித்து நிற்கின்றார். ஊழல் அதிமுக அமைச்சர்களைப் பாதுகாப்பதில் ஆளுநருக்கு அவ்வளவு அக்கறை ஏன் வந்தது?

பேரறிவாளன் விடுதலை குறித்து ஆளுநர் ரவி மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து, அதற்காக உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகி இருக்கிறார்.



“தமிழ்நாட்டின் ஆறரை கோடி மக்களின் பிரதிநிதிகளான 234 சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதித்து எடுக்கும் முடிவுகளை, ஒன்றிய அரசால் நியமனம் பெற்ற ஒற்றை நபர், ஆளுநர் என்ற பெயரில் தடுத்து நிறுத்துவது என்பது மக்களுக்கு எதிரான சர்வாதிகாரம் ஆகும்.”

தமிழ்நாட்டின் ஆறரை கோடி மக்களின் பிரதிநிதிகளான 234 சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதித்து எடுக்கும் முடிவுகளை, ஒன்றிய அரசால் நியமனம் பெற்ற ஒற்றை நபர், ஆளுநர் என்ற பெயரில் தடுத்து நிறுத்துவது என்பது மக்களுக்கு எதிரான சர்வாதிகாரம் ஆகும்.

இப்பொழுது தமிழ்நாடு அரசு ஆளுநரின் செயலுக்கு எதிராகத் தவிர்க்க முடியாத சூழலில் வழக்குத் தொடுத்திருக்கிறது. ஆளுநர் பதவியே தேவையற்றது என்கின்ற கருத்து நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டின் முதல்வர் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள் “குறைந்தபட்சம் நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரைக்கும் இந்த ஆளுநரை மாற்றி விடாதீர்கள்” என்று “பூடகமாக” ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் வைத்துள்ளார்.

ஏற்கனவே பஞ்சாப் அரசு Vs ஆளுநர் வழக்கிலும், தமிழ்நாடு அரசு Vs ஆளுநர் (பேரறிவாளன்) வழக்கிலும் யாருக்குக் கூடுதல் அதிகாரம்! சட்டமன்றத்திற்கா? ஆளுநருக்கா? என்கிற கேள்வியில், பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று அமைகின்ற சட்டமன்றத்திற்குத்தான் கூடுதல் அதிகாரம் என்று தீர்ப்பு வழங்கி உள்ளது உச்ச நீதிமன்றம்.

சட்டமன்றத் தீர்மானங்களை ஒரு ஆளுநர் எவ்வளவு காலம் ஒப்புதல் தராமல் ஒத்தி வைக்கலாம்? என்று கேட்டால் As soon as possible என்றுதான் குறிப்பிடப்படுகிறது. ஆனால் As late as possible என்பதே ஆளுநர் ஆர் என்.ரவியின் நடைமுறையாக இருக்கிறது. எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருக்க வேண்டும் என்பது எதேச்சதிகாரம். அது மக்களாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்தக் கேடுகளுக்கு எல்லாம் மூலாதாரமாக இருப்பது பிரதமர் நரேந்திர தாஸ் மோடியின் மனப்பாங்கு . அவர் நினைத்ததைத்தான் இவர் செய்து கொண்டிருக்கின்றார். அவரைப் பொறுத்தவரையில் நாட்டில் ஒரு பாராளுமன்றம்,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## நூறைத் தாண்டிய தியாகி



நூறு ஆண்டுகள் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும், பொதுவுடைமை இயக்கத் தலைவர்களில் ஒருவரான பெரியவர் என்.சங்கரையா அவர்களுக்கு 2021, ஆகஸ்ட் 15 அன்று ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கிப் பெருமைப்படுத்தி இருக்கிறது தமிழ்நாடு அரசு.

சங்கரையா அவர்களின் பெருமையை உலகறியும்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை வகுப்பில் படிக்கும் மாணவப் பருவத்தில் இந்தியாவின் விடுதலைக்காகச் சிறை சென்றவர்.

தன்னலமற்றப் பொதுவுடைமைச் சிந்தாந்தவாதி அவர்.

அப்படிப்பட்டவர்களின் உழைப்பை மதித்து பல்கலைக்கழகங்கள் சிறப்பு முனைவர் பட்டம் கொடுப்பது இயல்பு.

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சங்கரையா அவர்களுக்கு சிறப்பு முனைவர் பட்டம் வழங்க பரிந்துரை செய்திருந்தார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட், செனட் ஆகியவைகளும் பரிந்துரைத்தன. அப்பல்கலைக்கழக ஆசிரியர் கூட்டமைப்பும் இதற்கு வரவேற்பு தெரிவித்தது.

ஆனால் நியமன ஆளுநர் பதவியில் இருக்கும் ஆர்.என். ரவி இதற்கான கோப்பில் கையெழுத்திட மறுத்து வருகிறார்.

விடுதலைப் போராட்ட வீரர்களை மதிப்பதில்லை என்று குற்றம் சாட்டும் அவருக்கு, விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சங்கரையாவைப் பாராட்ட, அங்கீகரிக்க மனம் வரவில்லை.

சனாதனம் சிவப்பை ஏற்றுக் கொள்ளாது என்பது தெரியும். ஆனால் அரசு சொல்வதை ஏன் ஆளுநர் கேட்பதில்லை என்பதுதான் தெரியவில்லை.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்க தொடர்ச்சி...

பல்வேறு சட்டமன்றங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு பண்பாடுகள், பல்வேறு உணவுப் பழக்க வழக்கங்கள் என்றெல்லாம் இருக்கக் கூடாது. ஒரே நாடு ! ஒரே மொழி! ஒரே பண்பாடு! ஒரே உணவுப் பழக்கம்! ஒரே ரேஷன் கார்டு! ஒரே பாராளுமன்றம்! ஒரே கட்சி! ஒரே ஆட்சி! என்று இருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

பல்வேறு மாநிலங்கள், பல்வேறு சட்டமன்றங்கள் என்று இருப்பதை எல்லாம் சிதைத்து சின்னாபின்னம் ஆக்கி எல்லாவற்றையும் சிறு, சிறு பகுதிகளாகப் பிரித்து “மாநிலம்” என்கின்ற உணர்வு இல்லாமலும், “மாநில சுயாட்சி”என்கின்ற பேச்சுக்கு இடமில்லாமலும் அதிபர் ஆட்சி, சர்வாதிகாரம் என்ற திசை நோக்கி பயணிக்க நினைக்கின்றார். இது முற்றிலும் மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிரானது, முரணானது.

ஆரிய மேலாதிக்கத்தை நிலைநாட்டி அனைவரையும் அடிமைகளாக நடத்துவது என்கின்ற கெடுநினைப்பைக் கொண்டிருக்கும் பாசிச பா.ஜ.க அரசை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முறியடித்து, வீட்டுக்கு அனுப்புவது தான் நாட்டின் நலனுக்கு உகந்தது.

நாடு காக்க, மொழி காக்க, மாநில உரிமைக்காக தமிழ்நாடு தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச, மதவாத, ஆதிக்க உணர்வு கொண்ட பாஜக அரசு வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும் இ.ந்.தி.யா. கூட்டணி வெற்றி பெற்று நாட்டை ஆளவேண்டும். ●



# “ஒட்டுக் கேட்கும் ஒன்றிய அரசு” ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை!

சாரதாதேவி

பா.ஜ.க. அரசு பதவி ஏற்றதிலிருந்தே, தொடர்ச்சியாகத் தனிநபர் சுதந்திரமும், கருத்துரிமையும் நெருக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டே இருக்கிறது. இது இந்திய நாட்டின் சனநாயகத் தன்மையைக் கொஞ்ச கொஞ்சமாக உருக்குலைத்து வருகிறது.

தங்கள் மதவாதத்துக்கும், ஊழல்களுக்கும், கார்ப்பரேட் சலுகைகளுக்கும், ஏகபோக ஆதிக்கத்திற்கும் எதிராக இருக்கும் எல்லாக் குரல்களையும் ஒடுக்கிவிட, அவர்கள் கையிலெடுத்த மிக நவீன, மோசமான ஒரு ஆயுதம்தான் பெகாசஸ் எனும் மென்பொருள். இத்தாலியின் NSO நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்ட உளவுச் செயலி அது. இதுவரை அது தொடர்பான உச்ச நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் கூட பா.ஜ.க. அரசு அந்தச் செயலியை வாங்கவில்லை என்றோ, அதைச் சனநாயகச் செயல்பாட்டாளர்களுக்கு எதிராக செயல்படுத்தவில்லை என்றோ தன்னிலை விளக்கம் அளிக்கவில்லை.

மேலும் தற்போது இரண்டாம் உலகப் போரைப் போல மோசமான அணு ஆயுதங்களைப் பயன்படுத்தி பாலஸ்தீன மக்களின் மீது போர் தொடுத்து வரும் இஸ்ரேலின் முதல் தாக்குதல் நாளன்றே ஓடிப்போய் ஆதரவு தெரிவித்தார் நரேந்திர மோடி. நாட்டின் வெளியுறவுக் கொள்கை வேறாக இருந்தும், இந்திய நாட்டின் பிரதமராக அல்லாமல், தனக்கும் இஸ்ரேலுக்கும் இருக்கும் நெருங்கிய அணுக்கமான உறவை மேலும் உறுதிப் படுத்திடவே அவ்வாறு தன்ஆதரவைச் செய்திருக்கிறார் எனத் தெரிகிறது.

> “ஆப்பிள் நிறுவனம், இணைய குண்டர்களுக்கு எதிர்காலத் திட்டமிடலுக்கு வசதியாகப் போகும் என்ற காரணத்தால், எச்சரிக்கையின் அடிப்படையை வெளியிடமுடியாது என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது”

அது மட்டுமல்லாமல், சென்ற வாரம், அரபு நாடுகளில் பணியில் இருந்த முன்னாள் இந்திய கப்பற்படை அதிகாரிகளை இஸ்ரேலுக்கு உளவு பார்க்கத் தூண்டியதாக அரபு நாடுகளால் தூக்குத் தண்டனை வழங்கப் பட்டிருக்கிறார்கள். பெகாசஸ் உளவுச் செயலியைத் தனக்குக் கிடைக்கச் செய்தமைக்கான நன்றிக் கடனாக இந்த உளவு வேலை பார்க்கப்பட்டதா என்ற விவரங்கள், தீர்ப்பின் விவரங்கள் வந்த பிறகே தெரிய வரும்.

கடந்த 2019 முதல், முக்கியமான எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட மனித உரிமைப் போராளிகள், தங்களுக்கு எதிர்க் கருத்துகள் கொண்ட அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோரின் அலைபேசிகள், கணினிகள், ‘வேவு’ பார்க்கப்படுவதாக, ஆளும் பா.ஜ.க. அரசின் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. அதற்குப் பல்வேறு ஆதாரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, முன்னாள் மத்தியப் புலனாய்வு முகமையின் தலைவர் அலோக் வெர்மா, சிறையிலேயே நிறுவனக் கொலை செய்யப்பட்ட பாதிரியார் ஸ்டேன் சாமி, ஜனநாயக வாலிபர் சங்கத்தின் தலைவரும், தற்போதும் சிறையிலிருக்கும் மாணவர் உமர் காலித், 6 ஆண்டுகள் துன்புறுத்தலுக்குப் பின் விடுவிக்கப்பட்டிருக்கும் டீஸ்டா செடல்வாத் இப்படி எண்ணற்ற செயல்பாட்டாளர்கள் இந்த இரகசியச் செயலியால் உளவு பார்க்கப்பட்டு, இயல்பான அவர்களின் கருத்துகளுக்காக, மோசமான சித்தரிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

ஆப்பிள் நிறுவனம் தங்கள் அலைபேசிக் கருவியில் அத்துமீறி சட்டவிரோதமாக பெகாசஸ் உளவுச் செயலியை நுழைத்ததற்காக NSO நிறுவனத்தின் மீது இரண்டு வாரங்களுக்கு முன்பு வழக்குத் தொடுத்துள்ளது. அத்தோடு இணைய குற்றவியல் வழக்கறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இந்தச் சிக்கலை சரியாக வழக்குத் தொடுக்கவும், ஆய்வு செய்யவும் 10 மில்லியன் டாலர்களை ஒதுக்குவதாகவும் அறிவித்துள்ளது. தங்கள் வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையைக் காப்பாற்ற ஆப்பிள் நிறுவனம் இந்த உளவுச் செயலிக்கு எதிராகக் களமிறங்கி இருக்கிறது.

சென்ற வாரம் மீண்டும் ஆப்பிள் நிறுவனம் உலகம் எங்கும் 150 நாடுகளில் உள்ள தங்கள் முகமையான வாடிக்கையாளர்களுக்கு ஒரு அறிவிக்கையை அனுப்பி உள்ளது. அதில், “அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்ட இணையக் குண்டர்களால் தங்கள் அலைபேசிகள் குறிவைக்கப்படலாம்” எனச்செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் ஒரு பத்துப் பேருக்கு மேல் அந்த அறிவிக்கை வரப் பெற்றிருப்பதாக அறிவித்துள்ளார்கள். இ.ந்.தி.யா. கூட்டணியைச் சேர்ந்த சசிதரூர், மஹுவா மொய்த்ரா, சீதாராம் எச்சூரி, அகிலேஷ் யாதவ், பிரியங்கா சதுர்வேதி, ராகவ் சதா, மூத்த பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன் உள்ளிட்ட பலருக்கும் அந்த எச்சரிக்கை வந்துள்ளது.

“அலைபேசி ஒட்டுக்கேட்பு நேர்மையானவர்கள் செய்யும் செயல் அல்ல; குற்றவாளிகளின் செயல்” என்று ராகுல்காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகக் கூறினாலும் அது மேலும் பாதிக்கப் பட்டவர்களையே குடையும் உத்தியைத்தான் கையாளும். ஆப்பிள் நிறுவனம், இணைய குண்டர்களுக்கு எதிர்காலத் திட்டமிடலுக்கு வசதியாகப் போகும் என்ற காரணத்தால், எச்சரிக்கையின் அடிப்படையை வெளியிடமுடியாது என திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

இது ஆளும் பா.ஜ.க. அரசு பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமைக்கு எதிராக எவ்வளவு மோசமான செயல்பாடுகளில் இறங்கும் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக அமைந்திருக்கிறது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian